# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடத்தப்படும் நிறுவனம்சார் மற்றும் பாடசாலைப் பரீட்சைகளுக்கான இணைப்பு உத்தியோகத்தர்/ பரீட்சை மேற்பார்வையாளர் பயிற்சிக் குழுமத்திற்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்.

01. மேற்படி பயிற்சிக் குழுமத்திற்கு தேர்ந்தெடுப்பதற்காக மாகாணங்கள்/ வலயங்கள்/ பிரிவுகள்/ கல்விக் காரியாலயம் ஒன்றிலோ அல்லது அரசாங்க பாடசாலைகளில் தற்போது சேவையாற்றும், இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின்/ இலங்கை அதிபர் சேவையின்/ இலங்கை ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படும். வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 அளவிலான தாளில் கணனியில் அச்சிடப்பட்ட அல்லது தெளிவான கையெழுத்தில் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரூடாக **2013** பெப்ரவரி **மாதம் 18** ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்போ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பக்கூடிய வகையில் உங்கள் நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கவும்.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**(திட்டமிடல் அமுலாக்கல் கிளை)**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**த.பெ.இல. 1503,**
**கொழும்பு.**

விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'பரீட்சை நிர்வாகப் பணிக்குழு பயிற்சிக் குழுமம்'** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

02. விண்ணப்பப்படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.

1. தேசிய அடையாள அட்டை
2. முதல் நியமனக் கடிதம்
3. நிகழ்கால பதவிக்குரிய நியமனக் கடிதம்
4. பெற்றுள்ள உயர்ந்த பட்ச கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை.
5. மொழித் தேர்ச்சியுடன் தொடர்பான தகைமை.

03. இனிவரும் பாடசாலை பரீட்சைகள் மற்றும் நிறுவனம்சார் பரீட்சைகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக நியமனம் செய்யப்படும் என்பதனால், மேற்படி பரீட்சைகளின் போது கடமை புரிய எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்கள் இப்பயிற்சிக் குழுமத்திற்கு விண்ணப்பித்தல் கட்டாயமாகும். அதற்கேற்ப இனிவரும் எல்லா பரீட்சைகளிலும் மேற்கூறப்பட்டுள்ள பரீட்சை பணிக் குழுவுக்காக நியமிக்கப்படுவது இக்குழுமத்தில் உள்ளடக்கப்பட்டு பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே.

04. தகைமைகளுக்கமைய தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஒழுங்கமைப்புப்பற்றி பிரதேச மட்டத்தில் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சி நடவடிக்கைகள் 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இக்குழுமத்திற்குத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நடைபெறும் தினம் மற்றும் இடம் முன்கூட்டியே அறியத் தரப்படும்.

05. இணைப்பு உத்தியோகத்தர் பதவி 24 மணித்தியாலங்கள் முழுவதும் உரிய இணைப்பு நிலையத்தில் தங்கியிருந்து முழுநேர சேவையில் ஈடுபட வேண்டியிருப்பதனால், அதற்காக விருப்பமுள்ள மற்றும் முழுநேரமும் சேவையில் ஈடுபடக்கூடிய ஆண் உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

06. விண்ணப்பிப்பதன் முதன்மை தகைமை (4 வகையான பதவிகளுக்கும் பொதுவானது)

6.1 பரீட்சைக் கடமைகள் தடைசெய்யப்பட்ட ஒருவராக அல்லது தற்காலிமாக பரீட்சை நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டவராக இல்லாதிருத்தல்.

6.2 ஏதேனும் குற்றம் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படாத ஒருவராக அல்லது 2013.01.01 திகதிக்கு முன்னரான 5 வருட காலப்பகுதியில் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக தண்டனை பெறாத ஒருவராயிருத்தல்.

07. கல்வி மற்றும் தொழில் தகைமை

7.1 இணைப்பு உத்தியோகத்தர்களுக்கானது

7.1.1 இலங்கை கல்வி நிர்வாக சேவை/ இலங்கை அதிபர் சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தராக இருத்தல் அல்லது இலங்கை ஆசிரியர் சேவையில் 8 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தராக இருத்தல்.

7.2 பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கானது

7.2.1 இலங்கை கல்வி நிர்வாக சேவையில்/ இலங்கை அதிபர் சேவையில் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I இல் பதவி வகிக்கும் ஒருவராக இருத்தல்.

அல்லது

7.2.2 இலங்கை ஆசிரியர் சேவையில் II-I ஆம் வகுப்பு/ II –II ஆம் வகுப்பு பதவியொன்றில் 3 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்த ஆசிரியராக இருத்தல் அல்லது 5 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்த பயிற்சி அல்லது கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியராக இருத்தல்.

08. பயிற்சி குழுமம் தயாரிக்கும் விடயத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

**டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார**
பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்லை.
2013.01.28

## விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

1. நீர் விண்ணப்பிக்கும் பதவியை உரிய கட்டத்தினுள் X அடையாளம் இடுவதன் மூலம் குறிப்பிடுக. இணைப்பு உத்தியோகத்தர் பதவிக்காக உரிய தகைமை பூர்த்தி செய்த ஆண் உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

2. (அ) விளிப்புச் சொல்லுக்கு (Titel) முன்னால் இருக்கும் கூட்டினுள் **x** அடையாளமிட்டு முதலெழுத்துக்களுடனான பெயரை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும்.

   உதா :- A.B.C. PERERA

   (ஆ) உங்கள் முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயரை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதி, (இ) யின் கீழ் முழுப்பெயரை தமிழில் எழுதவும். இரண்டு பெயர்களுக்கிடையில், ஒரு கூட்டினை வெறுமையாக விடவும்.

   (எ), (ஏ), (ஐ) தகவல்களை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும்.

   (ஏ) மற்றும் (ஐ) யின் கீழ் அருகாமையிலிருக்கும் நகரத்தையும் சேவையாற்ற விரும்பும் நகரங்களையும் தெரிவு செய்யும் போது வழங்கப்பட்டுள்ள நகரங்களிலிருந்து தெரிவு செய்க.

3. உங்கள் தனிப்பட்ட மற்றும் அலுவலக முகவரிகளை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும். சொற்களுக்கிடையில் ஒரு கட்டம் வீதம் வெறுமையாக விடவும்.

4. (அ), (ஆ) மற்றும் (இ) என்பவற்றை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும்.

5. நீர் பெற்றிருக்கும் உயர்கல்வித் தகைமையைக் குறிப்பிட்டு சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்.

6. நீர் பெற்றிருக்கும் உயர்ந்த தொழில் தகைமையைக் குறிப்பிட்டு சான்றுப் பிரதியொன்றை இணைக்கவும்.

7. (அ) சிங்களம் = S, தமிழ் = T, ஆங்கிலம் = E உரிய எழுத்தை கூட்டினுள் எழுதவும்.

   (ஆ) உங்களது தாய்மொழிக்கு மேலதிகமாக வேறு மொழியில் வேலை செய்யும் ஆற்றலைக் குறிப்பிடுக. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மேலதிகமாக வேறு மொழிகள் தெரிந்திருப்பின் அவை எம்மொழிகள் என்று புள்ளிக்கோட்டின் மீது குறிப்பிடுக.

8. (அ) மற்றும் (ஆ) பூரணப்படுத்தும் போது கீழ்க்காணும் பதவி ஒன்றில் அல்லது பலவற்றில் உங்களின் அனுபவத்தைக் குறிப்பிடுக.

   1. இணைப்பு உத்தியோகத்தர்.
   2. உதவி இணைப்பு உத்தியோகத்தர்.
   3. பரீட்சை மேற்பார்வையாளர்.
   4. உதவி மேற்பார்வையாளர் (நிரந்தர பரீட்சகர்)
   5. மதிப்பீட்டு நிலைய நிர்வாகி
   6. மதிப்பீட்டு நிலைய உதவி நிர்வாகி
   7. பிரதேச ஒன்று சேர்க்கும் நிலைய நிர்வாகி
   8. பிரதேச ஒன்று சேர்க்கும் நிலைய உதவி நிர்வாகி

பாடசாலை பரீட்சைகளின் கீழ்,

1. க.பொ.த (சா.தர) பரீட்சை.
2. க.பொ.த (உ.தர) பரீட்சை.
3. 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சை.
4. தகவல் தொழினுட்ப பரீட்சை (GIT)

**(ஆ) வேறு பரீட்சைகள்,**

1. உள்நாட்டுப் பரீட்சைகள் : பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சைகள், சான்றிதழ் பரீட்சைகள் (உதா : அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சை, ஆசிரியர் கல்லூரி இறுதிப் பரீட்சை போன்ற பரீட்சைகளைக் குறிக்கும்.)
2. வெளிநாட்டுப் பரீட்சைகள் : பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் CIMA, CIM, ACS, NCC ஆகிய வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்காக நடாத்தப்படும் பரீட்சைகளைக் குறிக்கும்.

9. உங்கள் விருப்பினை கூட்டினுள் **x** அடையாளமிடுவதன் மூலம் குறிப்பிடுக.

10. (அ), (இ) மற்றும் (உ) இல் உரிய கூட்டினுள் **x** அடையாளமிடுக.

**இல: 1 - 10 வரை கேட்கப்பட்டுள்ள தகவல்களை சரியாகப் பூரணப்படுத்தி தங்களது உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரிடம்/ நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கவும்.**

11. உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்கள்:

- நீர் ஆசிரியர் அல்லது பிரதி/ உதவி அதிபர் எனில் அதிபர்.
- நீர் ஆசிரிய ஆலோசகர் அல்லது அதிபர் எனில் வலயக் கல்விப் பணிப்பாளர்.
- ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய நிறுவனத் தலைவரும் ஆவார்.

**உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்/ நிறுவனத் தலைவர்களுக்கான அறிவுறுத்தல்கள்:** தங்களுக்கு கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களின் இல. 11 இன் கீழ் கேட்கப்பட்டிருக்கும் இரகசிய சிபாரிசினை வழங்குக. ஒவ்வொரு விண்ணப்பதாரி தொடர்பான தொழில்ரீதியான சிபாரிசினை (Professional Recommendation) வழங்குவீர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. பின்னர், தங்களுக்கு கிடைக்கும் அனைத்து விண்ணப்பப்படிவங்களையும் அட்டவணைப்படுத்தி கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**திட்டமிடல் அமுலாக்கல் மற்றும் கண்காணிப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**த.பெ.இல. 1503,**
**கொழும்பு.**